Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 109 | வியாழக்கிழமை Thursday | 19.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி அமைய வேண்டும்

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில், மத்திய – மாநில அரசுகளின் உறவுகள் குறித்த ஆராய அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழு அறிக்கையில் முதல் பகுதியை முதல்வர் ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.இந்த அறிக்கையின் நகலை சட்டப்பேரவைஉறுப்பினர்களுக்கு வழங்கி, முதல்வர் பேசியதாவது:

முன்னாள் முதல்வர் அண்ணா, தனது இறுதி உயிர் போல எழுதியது தான் மாநில சுயாட்சி கொள்கை. அவரது மறைவுக்குப் பிறகு மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதை ஐம்பெரும் முழக்க ங்களில் ஒன்றாக கருணாநிதி வடிவமைத்து தந்தார்.

திராவிட ஆட்சியானது தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கு வழிகாட்டும் மாபெரும் முன்னெடுக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

மத்திய – மாநில அரசுகளின் உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை சட்டப்பேரவையில் வைக்க இருக்கிறோம்.

ஒரு மாநிலமாக மக்கள் காணும் கனவை முழுமையாக நிறைவேற்ற நம்மிடம் அதிகாரம் இல்லை. ஏனெனில், மாநில உரிமைகளை வழங்கும் மத்திய அரசு அமையவில்லை. இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் கல்வி,சுகாதாரம்,பொருளாதாரம், உள்கட்டமைப்பில் முன்னேறி வருகிறோம்.நிலஉரிமை, நிதி உரிமை உள்ளிட்ட கோரிக்கைக்கு இன்னும் கடுமையாக போராடும் சூழல்தான் உள்ளது.

எல்லா அதிகாரங்களையும் கொண்டவையாக மாநில அரசுகளை மாற்றும் வகையில் அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்ட முன்னெடுப்புகளை தொடங்கக் கூடிய நாள் இன்று.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள மத்திய அரசு,மாநில அரசுகளை மதிப்பதில்லை. இன்னும்எத்தனை நாள்கள்தான் அவர்கள் கொடுக்கும் இடத்திலும், நாம் வாங்கும் இடத்திலும் இருக்க வேண்டும். இதற்கு தீர்வு காணும் வகையில் மத்திய - மாநில அரசுகளின் உறவுகள் குறித்த உயர்நிலைக்குழுவின்அறிக்கை. சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் பூனைக்கு மணி கட்டியுள்ளோம்.

அனைத்து மாநிலங்களும் சுயாட்சி பெற்றவையாக இருக்க வேண்டும். அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சி அரசாக மத்திய அரசு செயல்பட வேண்டும் என்பதுதான் நமது கொள்கை. மற்ற மாநிலஅரசுகளின் உள்ளத்திலும் இதுதான் இருக்கின்றன.

மாநில சுயாட்சி கொள்கையை அரசியல் எல்லைகளைக் கடந்து அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மத்திய – மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்நிலைக் குழுவை தமிழக அரசு நியமித்தது. அந்தக் குழு தனது அறிக்கையை கடந்த 16ஆம் தேதி வழங்கியுள்ளது.

மாநில சுயாட்சி வேண்டும், மத்தியில் கூட்டாட்சி மலர வேண்டும்.இது தனிப்பட்ட அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல, இந்திய மக்களின் வாழ்வியல் கோரிக்கை. பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவுக்கு கூட்டாட்சி தான் அடிப்படை. எனவே, இத்தகைய தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும்.

கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. நாம் முயன்றால் மீண்டும் திருத்த முடியும். இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும் முயற்சியைத் தொடங்க வேண்டும். அதிகாரமும் வாய்ப்புகளும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது, பரவலாக வேண்டும்.

கூட்டாட்சி கொண்டதாக இந்திய அரசியலமைப்பை மாற்றுவது மத்திய அரசை பலவீனப்படுத்தாது என்று அறிக்கை கூறுகிறது.

ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்படவிடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி., ஹிந்தி திணிப்பு, கல்வி நிதி அனைத்துக்கும் ஒரே மருந்து மாநில சுயாட்சிதான்.

நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையிலும், மக்களவையிலும், இந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் ஜனநாயக சக்திகள் அதிகமாக இருக்கிறார்கள். எண்ணிக்கையாலும், எண்ணங்களாலும் அதிகமாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள்.மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும்" எனத் தெரிவித்தார்.

# தமிழக செய்திகள் 7.5 சதவீத ஒதுக்கீட்டுக்கு தி.மு.க. சொந்தம் கொண்டாடுவதா..? சட்டப்பேரவையில் அ.தி.மு.க.வினர் அமளி



சென்னை,

தமிழக சட்டசபையில் நேற்று அரசின் இடைக்கால பட்ஜெட் மற்றும் இடைக்கால வேளா ண்மை பட்ஜெட் ஆகியவை ஒரே நாளில் தாக்கல் செய்யப்பட்டன.அதன்பின்னர்சபாநாயகர்அறையில் அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் நடைபெற்றது. அதில், குழு உறுப்பினர்களாக உள்ள அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர்.

இதனைத்தொடர்ந்து தமிழக சட்டசபையில்,பட்ஜெட் கூட்டத்தொடர் வருகிற 20-ந்தேதி வரை நடைபெறும் என்று சபாநாயகர் அப்பாவு அறிவித்தார்.

வரும் 20ம் தேதி பட்ஜெட் மீதான விவாதங்களுக்கு பதில் அளிக்கும் நிதியமைச்சர், கூடுதல் செலவினங்களுக்கான மானிய கோரிக்கையை தாக்கல் செய்ய உள்ளார்.

இந்நிலையில் தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் குறித்த விவாதம் பேரவையில் தொடங்கியது. இதன்படி (18-02-2026) முன்னாள் எம்.எல்.ஏ.க்களின் மறைவு குறித்து சட்டசபையில் இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டது.பின்னர். மராட்டிய மாநில முன்னாள் துணை முதல்-மந்திரி அஜித் பவார், மூத்த கல்வியாளர் ராசகோபாலன் ஆகியோரின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து சட்டசபையில் வாசித்தளிக்கப்பட்ட 2026-2027-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட் மற்றும் இடைக்கால வேளாண்மை பட்ஜெட் ஆகியவற்றின் மீதான எம்.எல்.ஏ.க்களின் பொது விவாதம் தொட ங்கி நடைபெற்று வருகிறது.

அப்போது தி.மு.க.வின் போராட்டமே 7.5 சதவீத ஒதுக்கீட்டுக்கு காரணம் என்று சட்டப்பேரவையில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்தார்.

இந்நிலையில் 7.5 சதவீத ஒதுக்கீட்டை நாங்கள் தான் கொண்டும் வந்தோம் என்று கூறி அ.தி.மு.க. உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இதற்கு அ.தி.மு.க. உறுப்பினர்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளார் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:-

விளம்பரம் தேடும் செயலில் மட்டும் தமிழக அரசு ஈடுபடு கிறது

.நாங்கள் செய்ததை-கூட சொல்லி விளம்பரம் தேடிக்கொண்டது இல்லை.தி.மு.க.,அ.தி.மு.க.ஆட்சியை சேர்த்துதான் 11.19 சதவீத வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

அரசு பள்ளி மாணவர்களுக்கு யாரும் கேட்காமல் மருத்துவபடிப்பில் 7.5 சதவீத ஒதுக்கீட்டை அ.தி.மு.க.வழங்கியது.அ.தி.மு.க.வின் 7.5 சதவீத ஒதுக்கீட்டுக்கு தி.மு.க. சொந்தம் கொண்டாடுவதா..? 7.5 சதவீத ஒதுக்கீடு குறித்து தி.மு.க. எப்போதாவது பேசியது உண்டா..? ஏதாவது ஆதாரத்தை காட்டுங்கள். உண்மைக்கு புறம்பான தகவல்கள் பேசப்படுகின்றன. நீட் தேர்வு வாக்குறுதியில் நீங்கள் ஏதாவது சாதித்தது உண்டா..?

நீட் தேர்வு விலக்கு வாக்குறுதியில் நீங்கள் இன்று வரை ஒன்றும் செய்ததில்லை. மா.சுப்பிரமணியன் எதை கூறினாலும் தவறாகத்தான் கூறுகிறார்.

உண்மைக்குமாறான கருத்தை அமைச்சர் கூறியதால்தான்

இவ்வளவு பிரச்சினை. மாணவர்களுக்கு படிக்கும்போது மடிக்கணினி கொடுக்காமல்..படித்து முடித்த பின் கொடுத்தது ஏன்..?

இவ்வாறு அவர் கூறினார்.

# மார்ச் 16ல் மாநிலங்களவை தேர்தல்; தமிழகத்தில் காலியாகும் 6 இடங்கள்




மாநிலங்களவைத் தேர்தலுக்கான தேதியை இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் புதன்கிழமை வெளியிட்டுள்ளது.

நாட்டில் தமிழகம், மேற்கு வங்கம் உள்பட 10 மாநிலங்களில் 37 இடங்களுக்கான மாநிலங்களவைத் தேர்தல் வருகிற மார்ச் 16 ஆம் தேதி நடைபெறும் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழகத்தில் 6 இடங்கள் காலியாகின்றன.

தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்கம், அஸ்ஸாம், பிகார், சத்தீஷ்கர், ஹரியாணா, ஹிமாசலப் பிரதேசம், தெலகானா உள்ளிட்ட இடங்களில் மொத்தமாக 37 இடங்கள் காலியாகின்றன. இதில், 17 எம்பிக்கள் பதவிக்காலம் ஏப்ரல் 2 ஆம் தேதியும், மீதமுள்ள 20 எம்பிக்களின் பதவிக்காலம் ஏப்ரல் 4 ஆம் தேதியும் நிறைவடைகிறது. தமிழ்நாட்டில் உள்ள மாநிலங்களவை எம்பிக்கள் என். ஆர். இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, தம்பிதுரை, ஜி.கே. வாசன், பி. செல்வராசு உள்ளிட்டோரின் பதவிக்காலம் ஏப்ரலில் நிறைவடையவுள்ளது.

மகாராஷ்டிரத்தில் டாக்டர் பகவத் கிஷன்ராவ் கான், டாக்டர் பௌசியா தஹ்சீன் அகமது சதுர்வேதி, பிரியங்கா விக்ரம் பவார், சரத்சந்திர கோவிந்தராவ் பாட்டீல், தைரியஷில் மோகன் பாட்டீல், ரஜனி சோக்ராவ் அத்வாலே, ஒடிசாவில் மம்தா மோகந்தா, முசிபுல்லா கான், சுஜீத்குமார், நிரஞ்சன் பிஷி, மேற்கு வங்கத்தில் சகேத் கோகலே, ரிதாப்ரதா பானர்ஜி, விகாஷ் ரஞ்சன் பட்டாச்சார்யா, மௌசம் நூர், சுப்ரதா பாஷி, அஸ்ஸாமில் ராமேஷ்வர் தெலி, புவனேஷ்வர் காலிதா, அஜித்குமார் பூயான், பிகாரில் அமரேந்திர தாரி சிங், பிரேம் சந்த் குப்தா, ராம்நாத் தாக்குர், உபேந்தர குஷ்வாகா, ஹரிபன்ஷ் நாராயண் சிங், சத்தீஷ்கரில் கவி தேஜ்பால் சிங் துளதி, பூலோ தேவி நேதம், ஹரியாணாவில் கிர்ண் சௌதரி, ராம்சந்தர் ஜங்காரா, ஹிமாசலப்பிரேதசத்தில் இந்து பாலா கோஸ்வாமி, தெலங்கானாவில் டாக்டர் அபிஷேக் மனு சிங்கவி, சுரேஷ் ரெட்டி உள்ளிட்டோரின் பதவிக்காலம் நிறைவடைய வுள்ளது. மாநிலங்களவைத் தேர்தலுக்கான அறிவிப்புகள் வருகிற பிப். 26 ஆம் தேதி வெளியாகிறது. அதைத்தொடர்ந்து மார்ச் 5 ஆம் தேதி வேட்புமனுக்கள் தாக்கலுக்கான கடைசி நாளாகும். மார்ச் 6 ஆம் தேதி வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறுகிறது. வேட்புமனுவைத்திரும்ப பெற மார்ச் 9 ஆம் தேதி கடைசி நாள்.

மாநிலங்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு மார்ச் 16 ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து அன்று மாலையே வாக்கு எண்ணிக்கையும் நடைபெறவுள்ளது.

சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தமிழ்நாட்டில் திமுக சார்பில் 4 எம்.பிக்களையும், அதிமுக சார்பில் 2 எம்.பிக்களையும் தேர்வு செய்ய முடியும்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தூதளம் தினசரி காலை நாளிதழ்

19.02.2026

# 2047 இந்தியாவை வல்லரசாக்க இலக்கு: காரைக்குடியில் பாஜக மாநில செய்தி தொடர்பாளர் பட்ஜெட் விளக்கம்



சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் பிராமணர் சங்க கட்டிட அரங்கில் பாரதிய ஜனதா கட்சியின் மாநில செய்தி தொடர்பாளர் ஸ்ரீகாந்த் 17.02.2026 அன்று காலை செய்தியாளர்களை சந்தித்தார்.இந்த சந்திப்பில் 2047ஆம் ஆண்டில் இந்தியா வல்லரசாக உருவாகும் நோக்கத்தை உறுதி செய்யும் மத்திய பட்ஜெட் குறித்து விளக்க உரையளிக்கப்பட்டது. மேலும் அரசியல் மற்றும் பொதுநலன் தொடர்பான பல்வேறு விஷயங்கள் குறித்து விளக்கமளித்து, செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.,நிகழ்ச்சியில் பாரதிய ஜனதா கட்சியின் சிவகங்கை மாவட்ட தலைவர் பாண்டித்துரை, மாவட்ட செய்தி தொடர்பாளர் நாராயணன் மற்றும் ஊடகத்துறையினர் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் புதிய பள்ளிவாசல் திறப்பு விழாவில் திமுக நகர செயலர் அப்பாஸ்க்கு சிறந்த நகரசெயலாளர் விருது வழங்கி கௌரவிப்பு



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் கிருஷ்ணாபுரம் மக்கா நகர் முகைதீன் ஜாமீ ஆ மஸ்ஜித் பள்ளிவாசல் புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. புதிய கட்டிடத்தை பாத்திமா சபரிமாலா அவர்கள் திறந்து வைத்தார். மக்கா நகர் ஜமாத் தலைவர் ரெசவுமைதின் தலைமைதாங்கினார். தொகுப்பாளராக மக்கா நகர் செயலாளர் ஹாஜியார் பாதுஷா வரவேற்புரையாற்றினார். மேலும் கடையநல்லூர் நகர திமுக செயலாளராத இருந்து வரும் அப்பாஸ் ஜாதி மதம் இனம் அரசியல் கடந்து அனைவருக்கும் உதவி புரிந்து வருவதாலும் தேர்தலில் நின்று ஜெயித்து மக்கள் பணியாற்றி வருபவர்களை போன்று எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பாராமல் தேவையான நேரங்களில் தேவையான உதவிகள் செய்து வருவதை பாராட்டி சிறந்த நகர செயலாளர் என்ற பட்டத்தை வழங்கி பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். நிகழ்வில்ஜமாத்தின் துணைத் தலைவர் திவான் மைதீன் மக்காநகர்ஜமாத்துணைச் செயலாளர் முகமது மைதீன் மற்றும் மக்கா நகர் ஜமாத் நிர்வாகிகள் பேட்டை முஹல்லாஜமாத் தலைவர் சையது இப்ராஹிம், பேட்டை ஜமாத் செயலாளர் மகுதுகனி மற்றும்மதினாநகர்ஜமாத் தலைவர் நைனா முகமது, சித்திக்க, பீர்மைதீன், அபுபக்கர், சாகுல் ஹமீது மற்றும் கடையநல்லூர் தெற்கு நகர பொறுப்பாளர் இத்தாலியன் பீரப்பா,

கடையநல்லூர் நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான்,

கடையநல்லூர் 5வது வார்டு நகரமன்ற உறுப்பினரும் பணி நியமன குழு உறுப்பினருமான பால சுப்பிர மணியன் (எ) கண்ணன், வார்டு கழக செயலாளர்கள் மசூது, ரசாக், மக்கா நகர் முஹல்லா , சேவை அணி ராஜா முஹம்மது, அன்சாரி, மதரஸா மேலாளர் மாவட்ட ஹாஜி முகைதீன், முகைதீன் பள்ளி ஜமாத் சையது இப்ராஹிம், அன்வாரி, மக்கா நகர் பள்ளிவாசல் ஜமாத் இமாம் பேட்டை முஹ ல்லா , ஜமாத் இமாம் சாகுல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர் இறுதியாக மக்காநகர்துணைச்செயலாளர் முகமது மைதீன் நன்றியுரை கூறினார்.

# சித்தாமூர் அருகே அதிமுக சார்பில் தெருமுனை பிரச்சாரக்கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சித்தாமூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட அமுந்தங்கரணை, போந்தூர்.இப்பகுதிகளில் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிய மக்கள் திமுக ஆட்சியை கண்டித்து தெருமுனைப் பிரச்சார கூட்டத்தை சித்தாமூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கொளத்தூர் ரவி, ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் வேலாயுதம் இவர்கள்கலந்துகொண்டு பேசுகையில் தமிழகத்தில் இளம் விதவைகள் அதிகமாக உள்ளனர் இதற்கு மதுபான கடையே காரணம் அதனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மதுபான கடைகள் ஆலைகளை மூடுவோம் என வாக்குறுதி அளித்த கனிமொழி ஐந்தாண்டுகள் ஆக உள்ள நிலையில் இதுவரைக்கும் மதுபான கடைகளை ஒன்றுகூட மூடவில்லை என பேசினார்கள் இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய அவைத்தலைவர் விங்கேஸ்வரன், ஒன்றிய பொருளாளர் கனகராஜ், மாவட்ட பிரதிநிதி சங்கர், மாவட்ட பிரதிநிதி ஹரி கிருஷ்ணன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க இணைச் செயலாளர் குனாம்பேடு சிவக்குமார், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இளைஞர் அணி இளைஞரணி துணைச் செயலாளர் வெல்டிங் சேகர், மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் ரஜினிகாந்த், போந்தூர் கிளைச் செயலாளர் மணி ஏழுமலை முத்துவேல், சிறுகளத்தூர் தேசிகு, வயலூர் சந்திரன்,சித்தாற்காடு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மதுரை வீரன், அதிமுக நிர்வாகிகள் மோகன் சுரேஷ் ஏழுமலை பரசுராமன் மற்றும் அதிமுக நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# பெங்களூருவில் ரூ.21.5 கோடி போதைப்பொருட்கள் பறிமுதல்: 3 வெளிநாட்டினர் உட்பட 15 பேர் கைது



பெங்களூரு: பெங்களூரு மாநகர காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பெங்களூரு மத்திய குற்றப் பிரிவு போலீஸார் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருடன் இணைந்து அம்ருதஹள்ளி, ஹெப்பகுடி,ஜே.பி. நகர், கே.ஜி.ஹள்ளி உள்ளிட்ட இடங்களில் போதைப்பொருள் கடத்தலைதடுக்கும்பணியில் ஈடுபட்டனர்.

அதில் 9.46 கிலோ ஹைட்ரோகஞ்சா,34கிலோ கஞ்சா, 5.67 கிலோ எம்டிஎம்ஏ, 131 கிராம் கோகைன், 29 எல்எஸ்டி மாத்திரைகள், 27 கிராம் எல் எஸ்டி கட்டிகள், 462 மில்லி ஹாஷிஷ் எண்ணெய்உள்ளிட்டபோதைப் பொருட்கள் சிக்கின.

கடத்தல்காரர்களிடம் இருந்து 2கார்,3இருசக்கர வாகனம், 6 செல்போன்கள், ரூ.24 ஆயிரத்து 500 ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தலில் ஈடுபட்ட 15பேர்கைதுசெய்யப்பட்டனர்.

அதில் 3 பேர் வெளிநாட்டினர். 15 பேர் மீதும் போதைப் பொருள் தடுப்பு சட்ட பிரிவுகளின்கீழ் வழக்கு ப்பதிவு செய்யப்பட்டுள்ளது . பறி முதல் செய்யப்பட்ட போதைப் பொருட்களின் சந்தை மதிப்பு ரூ.21.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

முதற் கட்ட விசாரணையில், கல்லூரி மாணவர்கள் மற்றும் தகவல் தொழில் நுட்ப ஊழியர்களுக்கு விற்பனை செய்வதற்காக வெளிநாட்டில் இருந்து இவற்றை வாங்கியது தெரியவந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சிக்கு உட்பட்ட 1வது வார்டு தாண்டியப்பனூர் கிராமத்தில் அங்கன்வாடிமையம் கட்டிடம் கட்ட பூமி பூஜை


கிருஷ்ணகிரி மாவட்டம்ஊத்தங்கரை பேரூராட்சிக்கு உட்பட்ட 1 வது வார்டு தாண்டியப்பனூர் கிராமத்தில் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டம் மூலம் ரூ.18.20 லட்சம் செலவில் கட்டப்படவுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்திற்கு பேரூராட்சி தலைவர் அமானுல்லா பூமி பூஜை செய்து திட்டத்தை துவக்கி வைத்தார்.

பேரூராட்சி கவுன்சிலர்கள் சுமித்ரா தவமணி, கல்பனா விஜயகுமார், ஒப்பந்ததாரர் சண்முகம், திமுக கிளை செயலாளர் சேகர், இளைஞர் அணி துணை அமைப்பாளர் திருவேங்கடம், மகளிர் அணி பொறுப்பாளர் வசந்தா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

13 வது வார்டு இந்திரா நகரில் ரூ.15 லட்ச ரூபாய் செலவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பேரூராட்சி தலைவர் அமானுல்லா பூமிபூஜை போட்டு துவக்கி வைத்தார்.பேரூராட்சி கவுன்சிலர் ஸ்ரீ ராமன், நகர மீனவர் அணி அமைப்பாளர் தவமணி, ஒப்பந்ததாரர் கன்னிகா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் பா.ஜ.க. சார்பில் தெருமுனை கூட்டம்

பாரதிய ஜனதா கட்சியின்மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் ஆணைக்கிணங்கதென்காசிமாவட்டம் பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி அவர்கள்வழிகாட்டுதலின்படி தென்காசி மாவட்ட தேசிய ஜானகிய கூட்டணி நிர்வாகிகள் சார்பாக *நாளை நமதே-தமிழகமும் நமதே* துணைத் தலைவர் முத்துக்குமார் அவர்கள் தலைமையிலே தெருமுனை கூட்டம் நடைபெற்றதுஇந்தகூட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நகரக் கழகச் செயலாளர் சங்கர் அம்மா மக்கள் முன்னேற்ற கழக நகர செயலாளர் பால்ராஜ் சுரண்டை நகர பாஜக தலைவர்கணேசன் ஆகியோர்முன்னிலைவைத்தனர் மாவட்ட செயலாளர் அருணாசலம் வரவேற்புரையாற்றினார்சிறப்புரை மாவட்ட பொது செயலாளர் பாலகுருநாதன் மாநில செயற்குழு உறுப்பினர் அன்புராஜ் மாவட்ட பொருளாளர் கோதை மாரியப்பன் கடையநல்லூர் சட்டமன்ற அமைப்பாளர் விவேக் குமார் அதிமுக மாநில பேச்சாளர் பாலமுருகன் அதிமுக மகளிர் அணி நிர்வாகி இந்திராஆகியோர் சிறப்புரையாற்றினர் இந்த நிகழ்ச்சியில் பாரதியஜனதா கட்சியின் ஆலங்குளம் வடக்கு ஒன்றிய தலைவர் சரவணவேல் முருகையா கடையம் கிழக்கு ஒன்றிய தலைவர் வைகுண்ட ராஜா ஆலங்குளம் தெற்கு ஒன்றிய தலைவர் குமரகுருபரன் முன்னாள் செங்கோட்டை ஒன்றிய தலைவர் பால்ராஜ்ஒன்றிய தலைவர் பண்டரிநாதன் வர்த்தக பிரிவு மாவட்ட தலைவர் ரத்தினகுமார்பிரச்சார பிரிவு மாவட்ட தலைவர்



சங்கரநாராயணன் விருந்தோம்பல் பிரிவு மாவட்ட தலைவர் கே வி கண்ணன் சுற்றுச்சூழல் பிரிவு மாவட்ட தலைவர் சுப முருகன்மாவட்ட செயற்குழு உறுப்பினர் டி கே எம் ஆறுமுகசாமி முன்னாள் கலை மற்றும் கலாச்சார பிரிவு மாவட்ட தலைவர் கேபிள் பவுன்ராஜ்முன்னாள் நகரத் தலைவர் சிவனனைந்த பெருமாள் பிரச்சார பிரிவு மாவட்ட செயலாளர் ராயல் ராமசாமி கணபதியை பாண்டியன் தர்மராஜ் ராஜ முருகேஷ் யோக ராஜன் ஆறுமுகலிங்கம் பூதத்தா ன்மற்றும் கூட்டணியை கட்சி சார்ந்த அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

# கிறிஸ்தவர்களின் 40 நாட்கள் தவக்காலம் தொடங்கியது: தென்காசி தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் சாம்பல் புதன் அனுசரிப்பு



தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் சாம்பல் புதன் அனுசரிக்கப்பட்டது. ஈஸ்டர் பண்டிகைக்கு முன் கிறிஸ்தவர்கள் 40 நாட்கள் தவக்காலமாக அனுசரித்து வருகின்றனர்.கடந்த ஆண்டு நடைபெற்ற குருத்தோலை ஞாயிறன்று வழங்கப்பட்ட குருத்தோலைகளை ஆலயத்தில் வைத்து ஜெபம் செய்து சாம்பலாக்கி அதனை இறை மக்கள் நெற்றியில் குருவானவர் பூசும் நிகழ்வானது சாம்பல் புதன் என அழைக்கப்படுகிறது. இத் தவக்காலம் (Lent) என்பது கிறிஸ்தவர்களுக்கு ஒரு அருளின் காலம் மனமாற்றத்தின் காலமாகும். இந்த காலமானது இயேசு கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பை (Easter) நினைவு கூர்ந்து, தங்களை ஆன்மீக ரீதியில் தூய்மைப்படுத்திக்கொள்ளும் 40 நாட்கள் நோன்பு, ஜெபம், ஒருத்தல் முயற்சி மேற்கொள்ளும் காலமாகும். இன்றையதிருநீற்றுப் புதனில் தொடங்கி பெரிய சனிக்கிழமைவரை,இறைவேண்டல், தியாகம், தருமம் செய்தல் ஆகியவற்றின் மூலம் கடவுளோடு இணையும் காலமாக இது அனுசரிக்கப்படுகிறது.

இந்த நாட்களானது ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து 40 நாட்கள் என கணக்கிடப்படுகிறது. இது இயேசு பாலைவனத்தில் 40 நாட்கள் நோன்பிருந்து, செபித்த நிகழ்வை நினைவுபடுத்துகிறது.

மேலும், 'தவக்காலம்' என்பது தவறு செய்ததற்காக வருந்தி, மனம் மாறி, இறைவனின் அருளைத் தேடும் காலமாகும். இதில் முக்கியமாக ஜெபம் (Prayer): இறைவனுடன் அதிக நேரம் செலவிடுதல். நோன்பு (Fasting): உடலை வறுத்தி, எளிமையான வாழ்க்கையை வாழ்தல்.

தருமம் (Almsgiving): ஏழைகளுக்கு உதவி செய்தல் மற்றும் பிறரன்பு செயல்கள் ஆகியவை அறிவுறுத்தப்படுகிறது.

திருநீற்றுப் புதன் தான் தவக்காலத்தின் தொடக்க நாளாகும். அன்று திருச்சபையில் தலையில் சாம்பலை பூசி, "மண்ணிலிருந்து வந்தாய், மண்ணுக்கே திரும்புவாய்" (மனிதனின் நிலையற்ற தன்மை) என்பதை உணர்த்துகின்றனர். எனவே தவக்காலம் என்பது வெறும் உணவை தவிர்ப்பது மட்டுமல்ல, தீய பழக்கங்களைக் கைவிட்டு நல்லெண்ணங்களை வளர்த்துக்கொள்ளும் ஒரு மனமாற்ற காலமாகும். தென்காசி மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் அதிகாலையில்சாம்பல்புதனை அனுசரிக்கும் விதத்தில் சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இந் திருப்பலியினை தென்காசி மிக்கேல் அதிதூதர் திருத்தல அதிபரும் பங்குத் தந்தையுமான ஜேம்ஸ் அடிகளார் தலைமையேற்று நடத்தினார்.தொடர்ந்து இறை மக்கள் வரிசையாக பலிபீடம் நோக்கி வருகை தந்த இறை மக்கள் ஒவ்வொருவரின் நெற்றியில் சாம்பலினால் குருவானவர் சிலுவை அடையாளமிட்டு பூசினார். இந்நிகழ்ச்சியில் அமலவை அருட் சகோதரிகள் அருட்சகோதரர் மற்றும் தென்காசி சுற்றுவட்டார கிளை கிராமங்களான செங்கோல் நகர், சுந்தர பாண்டியபுரம், குடியிருப்பு, இலத்தூர், மத்தளம்பாறை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து திரளான இறை மக்கள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் ஞாயிறன்று பல்வேறு திருத்தலங்களுக்கு நடைபயணமாக செல்ல இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது .

# குவிக்கப்பட்ட குழாய்கள்... கவனிக்காத அதிகாரிகள்... ஆபத்தில் மக்கள்



நாகர்கோவில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வெட்டூர்ணிமடம் WCC சாலை ஓரமாக குவித்து வைக்கப்பட்டுள்ள பெரிய அளவிலான குழாய்கள் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தாக மாறி வருகிறது. சாலையோரத்தில் முறையாக தடுப்பு ஏற்பாடுகள் இன்றி வைக்கப்பட்டுள்ள இந்த குழாய்கள் நாளுக்கு நாள் சாலையைநோக்கிநகர்ந்துதற்போதுவெள்ளை கோட்டையும் தாண்டி வந்துள்ளது. குறிப்பாக இரவு நேரங்களில் மற்றும் அதிக போக்குவரத்து நேரங்களில் இந்த குழாய்கள் வாகன ஓட்டிகளுக்கு தெளிவாக தெரிவதில்லை. இதனால் எப்போது வேண்டுமானாலும் விபத்து ஏற்படும் அபாயம் நிலவுகிறது. இதனால் வாகன ஓட்டிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இது போன்ற அலட்சியமான செயல்பாடுகள் பொதுமக்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்குகிறது. சம்பந்தப்பட்ட துறைஅலுவலர்கள் உடனடியாகநடவடிக்கை எடுத்து சாலையில் குவித்து வைக்கப்பட்டுள்ள குழாய்களை அகற்ற வேண்டும் என பகுதி மக்கள் கோரிக்கை. விடுத்துள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் உள்ள தலைமை நீதிமன்றத்தில் வெடிகுண்டு மிரட்டல்மெயில் மூலமாக மாவட்ட நீதிமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நிலையில் வெடிகுண்டு தடுப்பு பிரிவு போலீசார் மோப்பநாய் மற்றும் மெட்டல் டிடெக்டர் கருவில் மூலம் மூன்று குழுக்களாக சோதனை இதனால் நீதிமன்றத்தில் உள்ள வழக்கறிஞர்கள், வழக்கு சம்பந்தமான அந்த பொதுமக்கள் நீதிமன்றத்தில் இருந்து வெளியேற்றம் மேலும் நாகர்கோவில் நீதிமன்றத்திற்கு இந்த ஆண்டில் வெடிகுண்டு மிரட்டல் இமெயில் மூலம் வந்துள்ளது.

# சுரண்டையில் இருந்து மதுரைக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டும்; பொதுமக்கள் கோரிக்கை



தென்காசி மாவட்டம் சுரண்டை வளர்ந்து வரும் வர்த்தக நகரமாகும் சுரண்டை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், விவசாயிகள், வியாபாரிகள், மாணவ மாணவிகள், கல்வி, மருத்துவம், வணிகம் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக மதுரை சென்று வருகின்றனர்.

ஆனால் சுரண்டையில் இருந்து மதுரைக்கு போதிய நேரடி பஸ் வசதி இல்லை ஆகவே இப் பகுதி மக்கள் தென்காசி, திருநெல்வேலி, புளியங்குடி, சங்கரன்கோவில் உள்ளிட்ட பல பகுதிகளுக்குசென்று பல பேருந்துகள் மாறி செல்ல வேண்டிய நிலை உள்ளதுஇதனால்நேரமும்பணமும்விரயமாவதுடன் சரியான நேரத்தில் சென்று பணிகளை முடித்து விட்டு திரும்ப முடிவதில்லை மேலும் பெண்கள், முதியோர், மற்றும் குடும்பமாக செல்பவர்கள் கடுமையான சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே சுரண்டையில் இருந்து மதுரைக்கு நிரந்தரமாக கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஏற்கனவே கடந்த 38வருடங்களுக்கு முன்பு சுரண்டையில் இருந்து மதுரைக்கு பாண்டியன் போக்குவரத்துகழகம்மூலம் 11பஸ்கள் இயக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது சுரண்டையில் இருந்து மதுரைக்குராஜபாளையம்வழியாகஇரண்டுபஸ்கள் மட்டுமே இயக்கப்படுகிறது. இந்த பஸ்கள் இயக்கம் போதுமானதாக இல்லை.

சுரண்டை பகுதி மக்கள் காலையில் மதுரை செல்லும் வகையில் சுரண்டையில் இருந்து காலை 6-00 மணிக்கு ராஜபாளையம் வழியாக மதுரைக்கும், தற்போது காலையில் இயக்கப்பட்டு வரும் காலை 11-00 மணிக்கும் மதியம் 3-30 மணிக்கும் மாலை 6-00 மணிக்கும் அதே போன்று மதுரையில் இருந்து தற்போது இயக்கப்பட்டு வரும் காலை 6-30 மணி பகல் 11-00 மணி மதியம் 2-00 மணி மற்றும் தங்கள் பணிகளை முடித்து விட்டு திரும்பும் வகையில் இரவு 6-00 மணி ஆகிய நேரங்களில் சுரண்டைக்கும் தமிழ்நாடுஅரசுபோக்குவரத்துகழகம்திருநெல்வேலி சார்பில் நிரந்தரமாக கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் அதே போன்று சுரண்டையில் இருந்து கோயம்புத்தூர், நாகர்கோவில், தேனி, கொல்லம், இராமநாதபுரம், இருக்கன்குடி ஆகிய பகுதிகளுக்கும் அரசு பஸ்களை உடனடியாக இயக்க கோரிக்கை விடுத்துள்ளனர் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் உடனடியாகநடவடிக்கைஎடுப்பார்களா



# போச்சம்பள்ளி அடுத்த சிவம்பட்டி பூங்காவனத்தம்மன் கோவில் மயான கொள்ளை சூரையாடு நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் அருகே உள்ள சிவம்பட்டி கிராமத்தில் பூங்காவன த்தனம் கோவில் திருவிழா நடைபெற்றது. இன்று மதியம் மயான கொள்ளை சூறையாடுதல் நிகழச்சிநடைபெற்றது.

முன்னதாக சக்திகரகம் எடுத்தல், அம்மன் ஊஞ்சல்தாலாட்டுநடைபெற்ற பிறகு கோவில் சன்னதியில் இருந்து மயானம் வரை ஊர்வலமாகவந்தஅம்மன் சிலை முன் காளி வேடம் அணிந்த பூசாரி மற்றும் விரதம் இருந்த ஏராளமான பக்தர்கள் அருள் வந்து ஆடியபடி மயானத்துக்குள் நுழைந்தனர். அப்போது அங்கு சென்றபூசாரி மற்றும்அருள் பெற்றபக்தர்கள் மயானத்தில் குழி தோண்டி வாயால் மனித எலும்புகளை கவ்வி அவற்றை அப்படியே தின்றுவிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது எலும்பை கவ்வியபடி ஆக்ரோஷமாக பெண்கள் கிராமபெண்களுக்கு அருள் பாலித்தனர். இதை காண சுற்று வட்டார கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் பொது மக்கள் வந்திருந்தனர்.மயானத்தின் முக்கிய நிகழ்வாக பூங்காவனத்தம்மன் சுவாமிக்கு படைக்கப்பட்ட உளுவல் தானியத்தை பக்தர்கள் மீது வீசுவார்கள். அப்போது பக்தர்கள் பெண்கள் மடியேந்தியும், துண்டு ஏந்தியும் வீசப்பட்ட உளுவளை பிடித்தால்,குழந்தை பாக்கியம் இல்லாதர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டுமென்றும், வீட்டில் தானியத்தை மூட்டை கட்டி வைத்தால் செல்வம் பெருகுமென்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

பூதவாகனத்தில் பூங்காவனத்தனம் மற்றும் சிம்ம வாகனத்தில் ஏழூரம்மன் அங்கு வந்து மயானத்தில் சூரையாடு நிகழ்ச்சி முடிக்கும் போது, பக்தர்களுக்கு சாட்டையடி கொடுத்து பேய் விரட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. கிராமத்தில் பித்து பிடித்தது போல் உள்ள பெண்களுக்கு இங்கு அழைத்து வரப்பெற்று சாட்டையடி கொடுக்கப்பட்டால் நிவர்த்தியாவிடுவதாக நம்பப்படுகிறது. ஆண்களும், இளைஞர்களும் சாட்டையடி பெறுவது நன்மை என பெற்றுக்கொள்கின்றனர். இதற்காக வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஊத்தங்கரை, திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பக்தர்கள் வந்து நேர்த்தி கடனை செலுத்துகின்றனர்.

# தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் கிழக்கு மண்டல அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம்

## மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது




தூத்துக்குடி மாநகராட்சியில் 278 புதிய சாலைகள் அமைப்பதற்கான டெண்டர் விடப்பட்டு, வரும் மே மாதத்திற்குள் முடிக்கப்படும் என்று மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்தார்.

தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசியதாவது: தூத்துக்குடி மாநகராட்சியில் 'மக்களைத் தேடி மாநகராட்சி' திட்டத்தின் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் பெறப்பட்ட 4,500 மனுக்களுக்கும் முழுமையாகத் தீர்வு காணப்பட்டுள்ளது. மாநகராட்சியில் சாலை வசதிகள் பெருமளவுநிறைவுபெற்றுள்ளன. சிறிய தெருக்களில் பேவர் பிளாக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. தற்போது அடுத்தகட்டமாக 278 புதிய சாலைகள் அமைப்பதற்கான டெண்டர் விடப்பட்டு, பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இவை அனைத்தும் வரும் மே மாதத்திற்குள் முடிக்கப்படும். போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 20 அடி முதல் 60 அடி வரைஉள்ளசாலைகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளன. தற்போது 5.5அடியாகஉள்ள சாலை அகலம், 7 அடியாக உயர்த்தப்பட உள்ளது. இதற்காகச் சாலைகளின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. மேலும் பிரதான சாலையில் போக்குவரத்தைக் குறைக்க, நாம் தமிழர் வளாகத்தில் இருந்து மூன்றாவது மைல் வரை புதிய சாலை அமைக்க ஆய்வுப் பணிகள் முடிந்து, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. இப்பணிகள் விரைவில் தொடங்கும். ஒரு சில பகுதிகளில் உள்ள பழைய கருப்பு நிறக் குடிநீர் குழாய்களை மாற்றும் பணி நடைபெறுவதால், பணிகள் முடியும் வரை பொதுமக்கள் குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பக்கிள் ஓடையின் இருபுறமும் 7 அடியாக விரிவாக்கம் செய்வதற்கான ஆய்வுப் பணிகள்தற்போதுநடைபெற்று வருகின்றன என்று தெரிவித்தார்.

இந்த முகாமில்மொத்தம் 24 மனுக்கள் பெறப்பட்டன. ஒருவருக்கு மனு கொடுத்த 5 நிமிடத்திலேயே சான்றிதழ் வழங்கப்பட்டது. மற்ற மனுக்கள் மீதும் உடனடியாக நடவடிக்கைஎடுக்கஅதிகாரிகளுக்கு மேயர் உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் துணைமேயர்ஜெனிட்டா செல்வராஜ், மண்டலத் தலைவர் கலைச்செல்வி, செயற்பொறியாளர்கள் வேலாயுதம், முனீர் அகமது, உதவிப் பொறியாளர் ராஜேஷ் கண்ணன், சுகாதார ஆய்வாளர் ராஜசேகரன், மற்றும் கவுன்சிலர்கள் சுரேஷ்குமார்,ரெஸ்கிலின்,தனலட்சுமி, மரிய கீதா, ராமு அம்மாள், பேபி ஏஞ்சலின், மும்தாஜ், மகேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (18.02.2026) நேற்று கவுந்தப்பாடி கிளை நூலகத்தில் ஆய்வு மேற்கொண்டதைத் தொடர்ந்து போட்டித்தேர்வுக்கு படித்துக்கொண்டிருந்த மாணவ, மாணவியர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் குழுபுகைப்படம் எடுத்துக்கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (18.02.2026) ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி வாரச்சந்தையில் ஆய்வு மேற்கொண்டு, வியாபாரியிடம் கலந்துரையாடினார்.

## தூத்துக்குடியில்

# அ.தி.மு.க. சார்பில் வீடு வீடாக துண்டு பிரசுரம் விநியோகம்



தூத்துக்குடி மத்திய வடக்கு பகுதிக்கு உட்பட்ட 37வது வார்டு 42வது வார்டு பகுதிகளில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அளித்த தேர்தல் வாக்குறுதி குறித்த துண்டு பிரசுரங்களை வீடு வீடாக வழங்கப்பட்டது. அதன்படி தூத்துக்குடி தெற்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் சண்முகநாதன் அறிவுறுத்தலின்படி மண்டல செயலாளர், மாமன்ற உறுப்பினர் மந்திர மூர்த்தி தலைமையில் மத்திய வடக்கு பகுதி செயலாளர் ஜெய் கணேஷ் முன்னிலையில் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வட்ட செயலாளர்கள் அந்தோணி ராஜ், ரமேஷ், நவ்ஷாத், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் ராஜேஸ்வரி, மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் சண்முகபுரம் மாடசாமி, வட்டப்பிரதி கொக்கி குமார், மாவட்ட தொழில்நுட்ப பிரிவு முகமது அனிஷா, மாணவரின் செயலாளர் ரியாஸ் அகமது மற்றும் எம்.ஜி.ஆர். மன்ற நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# நல்லூரில் இலவச கண் பரிசோதனை முகாம் திரளான பொதுமக்கள் பங்கேற்பு




கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள நல்லூர் அக்ரஹாரம் பகுதியில், நேற்று பிப் 18, புதன்கிழமை மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78-வது பிறந்தநாளை முன்னிட்டு நல்லூர் வடக்கு ஒன்றிய அதிமுகசார்பில் முப்பெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பச்சமுத்து தலைமை தாங்கினார். பாண்டிச்சேரி மகாத்மா காந்தி மருத்துவமனை மற்றும் கடலூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம் ஆகியவை இணைந்து இந்த முகாமை நடத்தின.

மாவட்ட மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் சம்பத் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் டாக்டர் கொளஞ்சிநாதன் முகாமைத் தொடங்கி வைத்தார். இம்முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டதுடன், கண்புரை உள்ளிட்ட குறைபாடுகளுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகளையும்பெற்றுச்சென்றனர்.

# உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் சாத்தான்குளம் வட்டத்தில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை ஆட்சியர் க.இளம்பகவத் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தில் சாத்தான்குளம் வட்டம்,முதலூர் ஊராட்சியில் உள்ள பெண்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு வளர்ச்சி மையத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நடைபெற்ற கால்நடை வளர்ப்போருக்கான பராமரிப்பு தொழில் நுட்ப பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத், இன்று 18.2.26 குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பின்னர் முதலூர் ஊராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட விழுதுகள் வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

மேலும், முதலூர் ஊராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள வட்டார பொது சுகாதார ஆய்வகத்தினை ஆட்சியர் பார்வையிட்டார். பின்னர், படுக்கப்பத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை பார்வையிட்டார். அங்கு புதிதாக கட்டப்பட்டு வரும் மருத்துவ கட்டிடங்களை மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் பார்வையிட்டார்.

பின்னர் பெரியதாழை ஊராட்சியில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் மீன்பிடி இறங்குதலத்தினை மேம்படுத்தும் பணிகள் தொடர்பாக கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், இன்று 18.2.26 பார்வையிட்டார். ஆய்வின் போது அரசுத்துறை அதிகாரிகள் உடன் சென்றனர்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (18.02.2026) நேற்று கவுந்தப்பாடி கிளை நூலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

# வெளிநாட்டில் வேலை: ரூ.1.5 கோடி மோசடி செய்த நபர் 24 மணி நேரத்தில் கைது!



கன்னியாகுமரி மாவட்டம் மாதவரம் பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் (31) என்பவர், மகாதானபுரத்தில் 'சனேட்மேன்பவர் கன்சல்டன்சி' என்ற பெயரில் நிறுவனம் நடத்தி, துபாயில் உள்ள தனது நிறுவனங்கள் மூலம் வேலை வாங்கித் தருவதாகக் கூறி 130-க்கும் மேற்பட்ட நபர்களிடம் சுமார் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் வரை மோசடி செய்துள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின் பேரில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.

ஸ்டாலின் உத்தரவின்படி செயல்பட்ட மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார், வழக்கு பதிவு செய்து தலைமறைவாக இருந்த சந்தோஷை மதுரையில் வைத்து 24 மணி நேரத்திற்குள் அதிரடியாகக் கைது செய்து சிறையில் அடைத்தனர். இதுபோன்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடிகளில் ஈடுபடுவோர் மீது குண்டர் சட்டம் பாயும் என எச்சரித்துள்ள எஸ்.பி., பாதிக்கப்பட்டவர்கள் 9498196976 என்ற எண்ணைத் தொடர்புகொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# பெட்டிக்கடைக்காரர் கொலை வழக்கில் 21 பேருக்கு ஆயுள் தண்டனை



சென்னை: விழுப்புரம் மாவட்டம் கிளியனூர் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கான தேர்தல் முன் விரோதத்தில் பெட்டிக்கடைக்காரரை கொலை செய்த வழக்கில் விடுவிக்கப்பட்ட, முன்னாள் பஞ்சாயத்து தலைவி மற்றும் அவரது மகன்கள் உள்ளிட்ட 21 பேருக்கு உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

கிளியனூர் அருகேயுள்ள காட்ராம்பாக்கத்தை சேர்ந்த முன்னாள் பஞ்சாயத்து தலைவர்களான கிருஷ்ணவேணி தரப்புக்கும், வில்வமணி தரப்புக்குமிடையே தேர்தல் முன்விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில், அங்கு பெட்டிக்கடை நடத்திவந்தபாஸ்கர் என்பவர், வில்வமணிக்கு ஆதரவாக வேலை செய்துள்ளார்.

ஆனால், தேர்தலில் கிருஷ்ணவேணி வெற்றி பெற்று, மீண்டும் பஞ்சாயத்து தலைவராக பதவியேற்றார். 2013 மே 29-ம் தேதி வில்வமணி தலைமையில், கிராமத்தில் உள்ள கோயிலில் பாஸ்கர் திருவிழாவை நடத்தி உள்ளார்.கிருஷ்ணவேணி மற்றும் அவரது மகன்கள் மதன்ராஜ், மதன்குமார் மற்றும் உறவினர்கள் காத்தமுத்து, பார்த்திபன், ராணி, மூர்த்தி என்ற கிருஷ்ணமூர்த்தி, மாரிமுத்து, சுரேஷ், ஜெயராஜ், குமார், முரளி, தாஸ் என்ற சிவப் பிரகாசம், ஜனார்த்தனன், சிவக்குமார், ஜெயசேகர், வீரமணி, வேலு, ஜெயகாந்தன், வினோத்குமார், கருணாநிதி, ஞானசேகரன், ராமதாஸ் ஆகிய 23 பேரும், திருவிழா முடிந்து வீட்டில் இருந்த பாஸ்கரை கத்தியால் குத்தியும், இரும்பு கம்பியால் தாக்கியும் கொலை செய்துள்ளனர். இதுதொடர்பாக கிளியனூர் போலீஸார் விசாரணை நடத்தி, கிருஷ்ணவேணி உள்ளிட்ட 23 பேரையும் கைது செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த திண்டிவனம் கூடுதல் அமர்வு நீதிமன்றம், கொலைக் குற்றம் நிரூபிக்கப் படவில்லை என்று கூறி, 2017-ல் 23 பேரையும் விடுவித்தது.

அமுதா சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (18.02.2026) ஈரோடு மாவட்டம், சித்தோடு கிராம நிர்வாக அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, (17.02.2026) அன்று ஈரோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புத்தூர் புதுப்பாளையத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நிரந்திர காய்கறி பந்தல் பணியினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (18.02.2026) ஈரோடு மாவட்டம், பெரியபுலியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தொடுதிரை கற்றல் வகுப்பில் மாணவ, மாணவியர்களின் வாசிப்பு திறன் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

# பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு தகுதி தேர்வு; தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத்தலைவர் சா.அருணன் வரவேற்று நன்றி

எல்லோருக்குமான முதலமைச்சர் என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் நிருபித்து செயலாற்றி வருகிறார் ஆசிரியர் தகுதி தேர்வில் ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோரகளுக்கு மதிப்பெண்களை 5 % விழுக்காடு குறைத்து ஆணை வழங்கி அரசியல் அமைப்பு சட்டத்தில் இட ஒதுக்கீடு அவசியத்தை நிலைநாட்டினார் அதாவது ஏற்கனவே தாள் 1 தாள் இரண்டு 150 மதிப்பெண்ணிற்கு பொது பிரிவினருக்கு 60% விழுக்காடு அல்லது 90 மதிப்பெண்ணும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்த ப்பட்டோர் ஆதிதிராவிடர், அருந்ததியர் மற்றும் பழங்குடியினருக்கு 55% விடுக்காடு அல்லது 82.5 மதிப்பெண் எடுத்தால் தான் தேர்ச்சி என நிர்ணயம் செய்யப்பட்டு தேர்வு நடபெற்று வந்தது இந்த நிலையில் அரசியம் அமைப்பிற்கு எதிராக உள்ளது என பலர் கோரிக்கை வைத்த நிலையில் கடைசியாக சென்ற ஆண்டு' நடந்த ஆசிரியர் தொகுதி தேர்வுவில் இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டும் என கோரிக்கை வைத்த நிலையில் எல்லோருக்குமான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இனி ஆசிரியர் தகுதித்தேர்வில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படும் என்று அறிவித்து அதற்கான ஆணையை வெளியிட.டுள்ளது ஆசிரியர் தேர்வாரியம் பொது பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம்கள் உள்ளிட்ட பிரிவினருக்கு ஐந்து விழுக்காடு குறைத்து 55%ல் இருந்து 50% அல்லது 75 மதிப்பெண்ணாவுகும் ஆதிதிராவிடர் அருந்ததியர் , பழங்குடியினர் பிரிவை சேர்ந்தவர்கள் 40% விழுக்காடு அல்லது 60 மதிப்பெண்ணாக குறைத்து சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அரசியல் அமைப்பு சட்டத்தை பின்பற்றி ஆசிரியர் தகுதி தேர்வு மதிப்பெண்ணிலும் இட ஒதுக்கீட்டை பின்பற்றி சரித்திரம் படைத்துள்ளார் இந்த மாபெரும் புரட்சிக்கு துணையாகஉறுதுணையாக இருந்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

சரித்திரம் படைத்த அதேவேலையில் அன்மையில் உச்சநீதிமன்றம் பணியில் இருக்கும் இடை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியர் தகுதி தேர்வு எழுதி தேர்ச்சி அடைய வேண்டும் அதாவது ஒய்வுபெற ஐந்து ஆண்டுக்குள் இருப்பவர்களுக்கு மட்டும் விலக்கு அளித்து அனைத்து ஆசிரியர்களுக்கும் தகுதி தேர்வு கட்டாயம் என்ற அதிர்ச்சி தீர்ப்பை அளித்தது இந்த நிலையில் தீர்ப்பு வந்த மறுதினமே மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் அனைத்து ஆசிரியர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து கருத்துக்களை கேட்டறிந்தார் அப்போது தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உள்ளிட்ட பெரும்பாலான சங்க பிரதிநிதிகள் தகுதி தேர்வில் இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டும் என்றும் பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்பு தகுதித்தேர்வை நடத்த வேண்டும் கேட்டுக் கொண்டோம்

பாடவாரியன ஆசிரியர்களுக்கு அந்தந்த பாடத்தில் இருந்து 90 % விழுக்காடு கேள்விகள் மட்டுமே இருக்கவேண்டும் 10% பொது அறிவு வினாக்கள் இடம்பெற செய்ய வேண்டும் என்றும் ஆசிரியர் பணியில் தன்னை முழுவதுமாக ஈடுப்பட்டு அனுபவம் மிகுந்த ஆசிரியர்களாக இருப்பதால் செய்முறை மதிப்பெண் வழங்க வேண்டும் பணிக்காலத்தை கருதி அவர்களுக்கு சிறப்பு மதிப்பெண் வழங்கவேண்டும் தேர்வு செய்முறை பணிமூப்பு மதிப்பெண் என அனைத்தும் தேர்த்து 40% விழுக்காடு மதிப்பெண்ணை நிர்ணயம் செய்து தேர்ச்சி இருக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொண்டோம் அதனை மீண்டும் நினைவுப்படுத்தி பணிநாடுனருக்கு இட ஒதுக்கீடு அவசியம் ஆனால் ' ஏற்கனவே பணியில் இருப்பதால் பணியை தக்கவைத்துக் கொள்ள நடக்கும் சிறப்பு தகுதித் தேர்விற்கு இட ஒதுக்கீட்டை புன்பற்ற வேண்டியது இல்லை ஆதலால் மதிப்பெண்ணில் விலக்களித்து அனைத்து பிரிவு ஆசிரியர்க்களும் 40% விழுக்காடு அல்லது 60 மதிப்பெண்கள் எடுத்தாலே போதுமானது எனவும் மாற்று அறிவிப்பு செய்து ஆசிரியர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றஒட்டுமொத்த ஆசிரியர்களின் நலன் மாணவர் நலனில் அக்கறை கொண்டு பணியாற்றும் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.




# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழக அரசை கண்டித்து பா.ஜ.க.வின் பட்டியல் அணியினர் ஆர்ப்பாட்டம்

தேனி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பு தேனி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி பிஜேபி சார்பாக தமிழக அரசைகண்டித்துமாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ரவிக்குமார் முன்னிலை வகித்தார் .தேனி நகர செயலாளர் வரவேற்புரையாற்றினார்.

பட்டியலின மாவட்ட தலைவர் ராஜிக் தலைமையில் மாவட்ட செயலாளர் ராஜபாண்டி சிறப்பு அழைப்பாளர் சசி ராமன் மாநில செயற்குழு உறுப்பினர் மதுரை மாவட்ட பாரதிய ஜனதாகட்சிநிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொதுச் செயலாளர்கள்

வினோத் குமார் மலைசாமி, மயில் வேல், முத்துமணி முத்துப்பாண்டி தேனிமாவட்ட ஊடகப்பிரிவு மாவட்ட தலைவர் மாவட்ட மகளிர் அணி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆண்கள் பெண்கள் மற்றும் நிர்வாகிகள் திரளாககலந்து கொண்டு சிறப்பித்தனர்.





ஈரோடு வடக்கு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் சட்ட மன்ற தொகுதிக்கு 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை பொது கூட்டத்திற்கு திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் M.P., நேற்று வருகை புரிந்தார். அவரை ஈரோடு மாவட்ட திமுக சார்பில் வடக்கு மாவட்ட செயலாளர் என்.நல்லசிவம் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.



ஈரோடுமாவட்டம்,சத்தியமங்கலம்காளிதிம்பம்மலைக்கிராமத்திற்குமுதன்முறையாக அரசுப் பேருந்து இயக்கப்பட்டது. 300க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வசிக்கும் இப்பகுதிக்கு வந்த பேருந்தை, மக்கள் தங்களின் பாரம்பரிய 'பீச்சில்' இசை முழங்க உற்சாகமாக வரவேற்றனர். நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றிய அரசுக்கு கிராம மக்கள் நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, (17.02.2026) அன்று ஈரோடு, நஞ்சப்பகவுண்டன்வலசு அரசு மேல்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி மையத்தினை ஆய்வு மேற்கொண்டார்.

# காலிங்கராயன் கட்டிய தொட்டிபாலத்தை இடிக்க அதிமுக எதிர்ப்பு

ஈரோடு மாவட்டம் பவானி காளிங்கராயன் அணையிலிருந்து கொடுமுடி வரை செல்லும் காளிங்கராயன் வாய்க்காலில் ஒரு பகுதியான எல்லை மாரியம்மன் கோவில் பின்புறத்தில் உள்ள காளிங்கராயன் கட்டிய தண்ணீர் பாலத்தை இடிக்க அரசு திட்டமிட்டுள்ளது.இதை அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ சிவசுப்பிரமணியம் இந்த பாலம் 740 வருடங்களுக்கு மேல் பழமையானது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க பலமாக இருப்பதால் இந்த பாலத்தை அகற்றக்கூடாது எனவும் விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கக்கூடிய இந்த பாலம் இடிக்க பொதுமக்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்தும் வருகின்றனர் என்றார். இந்த பாலத்தில் பெரிதளவு எந்த பழுதும் ஏற்படவில்லை ஆகவே சிதலம்அடைந்தபகுதியை மட்டும் சீரமை த்துவிட்டு மீண்டும் அதே பொலிவுடன்பாலத்தை பயன்பாட்டிற்கு விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.





கோவை வேளாண்மை பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவிகள் ஈரோடு மாவட்டம் நம்பியூர்பகுதியில்கிராமதங்கல்திட்டம்கீழ்களப்பணிஆற்றிவருகின்றனர்.அரசங்காட்டு புதூரில் உள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பை பார்வையிட்டு அதன் சந்தை வாய்ப்பு, மதிப்பு கூட்டுதல், தகவல் பகிர்வு தொழில்நுட்பம், நிதி உதவி,குறைந்த செலவு கூடுதல் லாபம் போன்றவற்றை பற்றி கேட்டறிந்தனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.